**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**D.V.C. No. 7/2022 PW . 2**

பெயர் : ஜெயராமன் தந்தை/கணவர் பெயர்: சந்திரன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2024

---

02.09.2024 - எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. திருமணம் முடிந்து குலசாமி கோயிலுக்கெல்லாம் சென்று விட்டு சடங்குகள் முடித்து அன்று இரவு தான் மணமக்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் தெரியாது. அன்றைய தினமே மறுவீட்டிற்கு அனுப்பும்படி நான் சொன்னேன். அவர்கள் அனுப்பவில்லை. இரவு நேரம் என்பதால் மறுநாள் அனுப்பும்படி சொன்னதற்கு நான் கோவித்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் இல்லை. எனது மகள் அன்றையதினமே வீட்டிற்கு செல்லவேண்டும் என்று தலைவிரி கோலத்தோடு அழுதார் என்றால் அது பற்றி தெரியாது. மறுநாள் மணமக்கள் என் வீட்டிற்கு மறுவீட்டிற்கு வந்தார்கள் என்றால் இல்லை. 3ம் நாள் வந்தார்கள். மறுநாள் வந்தார்கள் என்றாலும் நான் தவறாக 3 நாள் கழித்து வந்தார்கள் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மறுவீட்டு முடிந்து மணமகள் மணமகன் வீட்டிற்கு திரும்பு போது மணமகள் அவர் பெற்றோர் அளித்த நகைகளை அணிந்து வருவது வழக்கம் என்றால் திருமணத்தின் போதே அனைத்து நகைகளையும் கொடுத்துவிட்டோம்.

2. எனது மகள் மறுவீட்டிற்கு வரும்போது நகைகளை அணிந்து வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. மறுவீடு வரும் போது அனைத்து நகைகளை மணமகள் அணிந்து வந்தார் என்றாலும் மறுவீடு முடிந்து மறுநாள் மணமகன் வீட்டிற்கு திரும்பும் போது பாதி நகைகளை மட்டும் அணிந்து சென்றார் என்றால் அது பற்றி தெரியாது. மறுவீடு முடிந்த மறுநாளே மனுதாரர் அணிவித்து வந்த நகைகளை மேலூர் அர்பன் கோ ஆப்ரேடிவ் வங்கியில் மனுதாரர், 1ம் எ.மனுதாரர் பெயரில் கூட்டாக லாக்கர் ஓபன் செய்து அந்த நகைகள் அதில் வைக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. மேற்படி லாக்கரை இருவரும் சேர்ந்து மட்டுமே இயக்கமுடியும் என்ற விவரம் எனக்குதெரியாது. திருமணம் முடிந்து மனுதாரர், 1ம் எ.மனுதாரர் கோவாவிற்கு தேனிலவு சென்ற விவரம் எனக்கு தெரியும். கோவாவிற்கு விமானத்தில் சென்று ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் எ.மனுதாரர் கடனா சென்ற மறுநாளே எனது மகளை அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. 1ம் எ.மனுதாரர் கனடா சென்று 2 நாட்கள் கழித்து மனுதாரர் வயலுக்கு சென்று அங்கு பூச்சிக்கடி ஏற்பட்டு மருத்துவமனை சென்று தகவல் தெரிவித்த பின்னர் நான் சென்று அழைத்தேன். அதன் பின்னர் முக்கிய விஷேசங்களுக்கு எ.மனுதாரர் வீட்டிற்கு சென்று வருவார் என்று சொன்னால் சரியல்ல. 1வாரம், 4 நாட்கள் தங்கி வந்துள்ளார். பொங்கல் வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் வீட்டிற்கு நானும், மனுதாரரும்

சென்று லாக்கர் சாவியை வாங்கிவந்தோம் என்றால் இல்லை.

3. நாங்கள் இருவரும் லாக்கர் சாவியை வாங்கி வந்தோம் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வங்கிக்கு மனுதாரர் மட்டும் சென்று லாக்கரில் இருந்த நகைகளை எடுத்துவந்த விவரம் எனக்குதெரியாது. மனுதாரர், 1ம் எ.மனுதாரர் தவிர வேறு யாராலும் லாக்கரை திறக்க முடியாது என்ற விவரம் எனக்கு தெரியாது. சீர்பரப்புதல் நிகழ்ச்சி எங்கள் பகுதியில் நடைபெறுமா என்றால் சீரை நேரடியாக மணமகன் வீட்டில் வைத்துவிடுவார்கள். சீர் நோட்டு எழுதும் வழக்கம்உண்டு. எனது மகள் திருமணத்திற்கு சீர் நோட்டு எழுதினோமா என்றால் எனக்கு தெரியாது. எனது மனைவிக்கு தான் தெரியும். சீர்நோட்டில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றும் தெரியாது. கொரோனா காலத்தில் சீர் அதிகமாக கொடுக்கமுடியாததால் தான் சீர்பரப்புதல், சீர்நோட் பராமரிக்கவில்லை என்றாலும் அது பற்றி தெரியவில்லை என்றாலும் சரியல்ல. சீர் வரிசை நன்றாக கொடுத்தேன். 13 லட்ச ஹீகுண்டாய் கார் மனுதாரர் பெயரிலோ, 1ம் எ.மனுதாரர் பெயரிலோ இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் உள்ளது. மேற்படி காரை விற்றுவிட்டேன் என்றால் சரிதான். 20 லட்ச ரூபாய் வீட்டு உபயோக பொருட்கள் வாங்கியதற்கான பில்லை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னென்ன பொருட்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எனது செல்வாக்கை காட்டுவதற்காக எனது மனைவி பெயரில் காரை வாங்கிவிட்டு அதனை விற்றுவிட்டு சீர்கொடுத்தாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு பெண்ணிற்கு நன்றாக சீர் செய்தேன். 1ம் எ.மனுதாரர் விசா எடுக்க ஏற்பாடுசெய்யாமல் கனடா சென்றுவிட்டார் என்றாலும் அதனால் நான் மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன் என்று எனது நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடுமையான கோவிட் காலத்திலும் விசா எடுப்பதற்காக 1ம் எ.மனுதாரர் பல முயற்சிகளை செய்து அது சம்பந்தமாக இமெயில்களை மனுதாரருக்கு அனுப்பினார் என்றால் அது பற்றி தெரியாது. 25.11.2020ம் சென்னை விஎப்எக்ஸ் நிறுவனத்தில் பயோமெட்ரிக் செய்வதற்காக முன் அனுமதி பெற்று மனுதாரரை அழைத்த விவரம் எனக்கு தெரியாது. மனுதாரரை விசா எடுப்பதற்காக அழைத்தார்கள் என்றாலும் எனது மகள் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் எ.மனுதாரர் மேலூரில் செல்வாக்கான நபர் என்றால் அது பற்றி தெரியாது. டிஎன் இபியில் எக்ஸிக்யூடிவ் இன்ஞினியராக பணியாற்றி ஓய்வு பெற்ற விவரம் தெரியும். அவர் அரசிதழ் அதிகாரி என்றால் தெரியாது. அவருக்கு இரண்டு பெண்கள். மேற்படி இரண்டு பெண்களுக்கும் தலா இரண்டு பெண் குழந்தைகளும் உள்ளது என்ற விவரம் தெரியாது. அவர்கள் ஒரே வீட்டில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவருக்கு வயது 60 என்றால் தெரியாது.

5. சமுதாயத்தில் ஒரு மதிப்புமிக்க நபராகவும், அரசில் உயர்ந்த பதிவியில் இருந்த நபரை வழக்கிற்காக அசிங்கப்படுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அவர் அரைகால்

உள்ளாடையுடன் மனுதாரரின் அறைக்குள் நுழைந்து அசிங்கமான செய்கைகள் காண்பித்தார் என்று எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகள் அவ்வாறு அவர் வந்ததால் அழுதார். மேற்படி சங்கதியை எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2020ம் வருடம் கார்த்திகை தினத்தன்று மனுதாரருக்கு கடுமையான வயிற்றுவலி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் தெரியும் என்று ஞாபகமில்லை. மனுதாரரே எனக்கு சொன்னார். சொன்னவுடனே கார்த்திகை தினத்தன்று கூட்டி வந்துவிட்டேனா என்றால் அன்று போய் பார்த்துவிட்டு மறுநாள் அழைத்து வந்தேன். கடுமையான வயிற்று வலி என்று மனுதாரர் சொல்லியும் நான் மனுதாரரை மறுநாள் அழைத்துவந்தேன் என்றால் சரிதான்.

6. மேற்சொன்னவாறு எந்த நிகழ்ச்சியும் நடக்காததால் தான் என்னால் சரியாக சாட்சியம் அளிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. மலம்பட்டி சென்று மருத்துவமனைக்கு கூட்டி சென்றதாக நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த மருத்துவமனை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சிங்கம்புணரி ஜெயகண்ணன் மருத்துவமனைக்கு தான் அழைத்து சென்றேன். மருத்துவமனை சென்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை. மனுதாரர் கார்த்திகை திபத்தன்று சந்தோஷமாக 2, 3 எ.மனுதாரர்களுடன் விழா கொண்டாடிய விவரம் எனக்கு தெரியாது. 4, 5 எ.மனுதாரர்கள் அவர்களுடைய குடும்பத்துடன் கார்த்திகை தீபம் கொண்டாடிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2, 3 எ.மனுதாரர்கள் குடும்பத்துடன் கொண்டாடினார்கள். வாட்ஸ்ஆப்பில் பேமிலி குருப்பில் பண்டிகை போட்டோக்களை அனுப்பிய விவரங்கள் எனக்கு தெரியாது. 4, 5 எ.மனுதாரர்கள் அவர்களுடைய குடும்பத்தினருடன் அவர்களுடைய வீட்டில்கொண்டினார்கள் என்றாலும் அது பற்றி தெரியாது என்றாலும் சரியல்ல. 2021 தை பொங்கலுக்கு 2ம் எ.மனுதாரர் எனது வீட்டிற்கு வந்தாரா என்றால் வரவில்லை. நாங்கள் தான் சீர் கொண்டு சென்றோம். 2ம் எ.மனுதாரர் எங்கள் வீட்டிற்கு தைபொங்கலுக்கு அழைப்பதற்கு வந்தாரா என்றால் ஞாபகமில்லை. தைபொங்கலுக்கு அழைக்க 2, 3 எ.மனுதாரர்கள் வந்தார்கள் என்றாலும் நான் அவர்களுடன் பிரச்சனை செய்து அனுப்பிவைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 26.10.2021ம் தேதி 2ம் எ.மனுதாரர் வீட்டிற்கு ஆவணங்கள் எடுக்க சென்றேனா என்றால் நான் மட்டும் செல்லவில்லை. 10 நபர்களுடன் சென்றேன்.

7. நான் சென்று பிரச்சனை செய்ததால் ஆவணங்கள் எடுக்கமுடியவில்லை என்றால் இல்லை. அவர்கள் பிரச்சனை செய்தார்கள். காவல்நிலையத்திலிருந்து காவலர்கள் வந்து சான்றிதழ்களை எடுத்துக்கொடுத்து கையொப்பம் செய்த பின்னரே பொருட்கள் எடுத்து வந்தோம் என்றால்சரிதான். சான்றிதழகள் எடுத்து வந்த விவரத்தை எனது நிரூபணவாக்கு மூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு எவ்வளவு நகை போட்டேன் என்ற விவரம் எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றாலும் அவ்வாறு போடப்பட்ட நகைகள் தற்போது வரை மனுதாரர் வசம் உள்ளது என்றாலும் சரியல்ல. 13.11.2021ல்

சிவகங்கை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். புகார் கொடுத்ததற்கு 2 மாதங்களுக்கு முன்னர் நான், எனது மனைவி, எனது மகன் மற்றும் உறவினர்களுடன் பஞ்சாயத்துக்கு எ.மனுதாரர் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான்.

8. மேற்படி பஞ்சாயத்தில் நான் வீதியில் போய் சத்தம் போட்டததால் எ.மனுதாரர்கள் என்னை வீட்டை விட்டு வெளியேற சொன்னார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்தில் பெண்ணை கட்டிய புடவையுடன் விட்டுவிட்டு சென்றால் நானே கனடாவிற்கு அனுப்புவதாக எ.மனுதாரர் சொன்னார் என்றால் இல்லை. அன்றிலிருந்து இன்று வரை 2ம் எ.மனுதாரர் பெண்ணை அனுப்பி வைத்தால் கனடாவிற்கு அனுப்புவதாக சொல்கிறார் என்றால் இல்லை. எ.மனுதாரர்கள் மனுதாரரை சேர்ந்து வாழ வைக்க முயற்சி செய்கிறார்கள் என்றாலும் எனது பிடிவாதமான குணத்தினால் நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 1ம் எ.மனுதாரர் கனடாவிற்கு சென்ற பிறகு 19.011.2020ல் ஒரு லட்சம் ரூபாய் பணம் மனுதாரருக்கு அனுப்பினார் என்றால் அது பற்றி தெரியாது. 1ம் எ.மனுதாரருக்கு பணம் கொடுத்ததாக எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் பணம் கொடுத்துள்ளேன். 13.11.2021ம் தேதி கொடுத்த புகாரின்அடிப்படையில் எந்த வழக்கும் பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரிதான். அவர்கள் அழைத்துசெல்வதாக 2ம் எ.மனுதாரர் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 07.05.2022ம் தேதி சமூக நலத்துறையில் புகார் கொடுத்தேன் என்றாலும் அங்கும் எங்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9. எ.மனுதாரர்கள் அங்கு வரவில்லை. எனது புகாரில் எந்த முகாந்திரமும் இல்லாததால் தான் எந்த வழக்கும் பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். எனது அரசியல் செல்வாக்கு, பணபலம் ஆகியவற்றை பயன்படுத்தி இந்த நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எ.மனுதாரர் எனது மகளுடன் சேர்ந்து வாழ்வதற்காக மேலூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP No. 166/2022 என்ற வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் மதுரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததால் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் விவகாரத்து கோரி எனது மகள் மனுதாக்கல்செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய வறட்டு கௌரவம், பிடிவாதனத்தினால் எ.மனுதாரர்களை பழிவாங்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரரின் வாழ்க்கையை கூட கவலைப்படாமல் அவரை பகடை காயாக பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர், 1ம்எ.மனுதாரரை சேர்ந்து வாழவைப்பதற்கு 2ம் எ.மனுதாரர் பல முயற்சிகள் எடுத்தார் என்றால் இல்லை.

கு.வி.முடிவுற்றது.